# கறுப்பாலான வெளி

பாலைநகர் ஜிஃப்ரி

மிகக் கறுப்பாலானதும்
மௌனம் கவிழ்ந்ததுமான
வெளியொன்றில் தனித்து விடப்பட்டிருக்கிறேன்
எனது வானில் நிலவில்லை, விண்மீன்கள் இல்லை
ஒளி தரும் எதுவுமற்ற இந்த
இருள்வெளியில் நான் தனித்தலைந்து
திரிகிறேன்

தூரத்தே தொலைதூரத்தே
என்னைப் போன்றதொரு தனித்த பறவையின்
பாடலைக் கேட்கிறேன்
அதன் வலியை உணர்கிறேன்
அதன் கனவுகளை காண்கிறேன்
அதன் அழைப்பைக் கேட்கிறேன்

வெளியெங்கும் அலைந்து திரியும்
பாடலின் பறவையே
என் சோகத்தை கேட்பாயா?

காற்றின் பேரோசையில் நீயுன்
சோகத்தை உரைப்பாய்
மரங்களில், மலைகளில், நீர்நிலைகளில்
மோதித் தெறிக்கும் உனது பாடல்
உனது சிறகுகள் உன் தனிமைக்குத் துணை
உனது பாடலும், உனது குரலும்
உனது கோரிக்கையாய் ஒலிக்கும்

கறுப்பாலான இந்த வெளியில்
தனித்து விடப்பட்ட எனது கனவுகளை
எடுத்துச் செல்ல என்னிடம் காற்றில்லை
எனது பாடல்களை ஒலிக்க
என்னிடம் குரலில்லை

சூழ்ந்திருக்கும் அச்சத்தையும்
மௌனத்தையும், இருளையும்
விட்டுவிடுதலையாகி தூரப் பறக்க
சிறகுகளுமற்றிருக்கிறேன்

உண்மையில் நான் எனது
மரணத்தை விரும்பவில்லை
உண்மையில் நான் எனது துயரத்தை
விரும்பவில்லை
எனக்கு விதிக்கப்பட்ட காலத்தை
வாழவே விரும்புகிறேன்
எனது உலகத்தை ரசிக்கவே விரும்புகிறேன்
சூழ்ந்திருக்கும் அச்சத்தையும்,
அடக்குமுறையையும் விட்டுவிடுதலையாகி
தூரப்பறக்கவே விரும்புகிறேன்

௨௦௦௬.௦௬.௦௫.